
புதுமலர்: 20 இதழ்: 06 கார்த்திகை - மார்கழி

# அனல்

01.11.2023

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா



அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

கர்த்தருடைய பரிசுத்தத்தையும்;
கர்த்தர் உங்களை
அழைத்த அழைப்பையும்
## மறவாதிருங்கள்.

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 116
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. அருட்பணியாளர் சரிதை
09. அனலின் ஆன்மீக விருந்து
10. வினா விடை - 118
11. தனிமை இல்லையேல்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.


**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

தேவனுக்கே மகிமையுண்டாகட்டும்.

இவ் வருடத்தின் கடைசி சஞ்சிகையூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. இம்மட்டும் அற்புதமாய் தேவன் எம்மை நடத்தியிருக்கிறார். அவர் செய்த சகல நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

துன்பமாயிருக்கட்டும்; இன்பமாயிருக்கட்டும் இரண்டுக்கும் மேலாக பெரியவராக தேவன் இருக்கிறார். சிலவேளை உங்களுக்கு ஏற்படும் துன்பத்தை நன்மையின் மூலதனமாக தேவனாலே மாற்ற முடியும்.

யோசேப்பை அவன் சகோதரர்கள் வெறுத்து இஸ்மவேலருக்கு விற்றார்கள். ஆனால் தேவன் அனேக மக்களைக் காக்கும்படி ஜீவரட்சணை உண்டாக்குகிறவனாக யோசேப்பை மாற்றினார். விற்கப்பட்டவன்; எண்ணற்ற மக்களுக்கு தானியத்தை விற்றான். விற்பனைப் பொருளைப் போல விற்கப்பட்டவன் இப்போது எகிப்தின் அதிபதியாக இருந்து விற்கிறான். இது தான் தேவனுடைய அற்புத செயல்.

மோசே நதியிலே போடப்பட்டான் கொல்லப்படுவதற்காக; ஆனால் தண்ணீர்கள் மேல் அதிகாரமுடையவனாக தேவன் அவனை மாற்றினார். எகிப்தில் தண்ணீரை இரத்தமாக மாற்றினான். செங்கடலை இரண்டாக பிளந்தான், கன்மலையில் இருந்து தண்ணீர் வரச்செய்தான். இது தான் தேவனின் அற்புதமான செயல்.

மோசேயின் வாழ்வில் தண்ணீர் என்றாலே அவனுடைய ஜீவனை எடுப்பதற்கான ஒன்றாக இருந்தது. ஆனால் அந்த தண்ணீர்களின் மேலே பலத்த அதிகாரம் உடையவனாக தேவன் அவனை மாற்றினார்.

அருமையான தேவ பிள்ளைகளே இவ் வருடத்தின் இறுதியில் வந்திருக்கிறோம். எவைகள் உங்களை வேதனைப்படுத்தியது, எவைகள் உங்களுக்கு ஆபத்தாக இருந்தது அவற்றையெல்லாம் நன்மையாகவும், அவைகளையே உங்களுக்கு ஆசீர்வாதமாகவும், அவைகளுக்கு மேலான அதிகாரமுடையவர்களாகவும் மாற்ற தேவனால் முடியும்.

இயேசு கிறிஸ்து மரணத்தினாலே எமக்கு ஜீவனை உண்டாக்கினார். எது அழிவையுண்டுபண்ணும் என்று பிசாசு நினைத்தானோ அதனாலேயே பிசாசுக்கு இயேசு அழிவை ஏற்படுத்தினார். வர இருக்கும் புதிய ஆண்டில் தேவன் தீமைகளை நன்மைகளாக மாற்றுவாராக.

~ ஆசிரியர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## கண்டிப்பும் கரிசனையும்..

வை. விமலதாஸ்

**வேலி அமைப்பது பாதுகாக்கத்தானே தவிர பாழாக்குவதற்கில்லை..**

விவசாயி ஒருவர் தனது காணிக்குள் புதிதாக ஒரு ஆலமரக்கன்றை நட்டு வைத்தார். மாத்திரமல்ல அந்த கன்று காற்றில் அசைந்து முறிந்துவிடாமல் இருக்க அதற்கு அருகில் ஒரு சிறிய தடியை நட்டு செடியை அதில் கட்டி வைத்தார். அதன் பின் மிருகங்கள் சேதப்படுத்தாமல் இருக்க அதை சுற்றி வலை ஒன்றினால் பாதுகாப்பு வேலி ஒன்றை அமைத்தார். அத்துடன் அதற்கு நேரத்துக்கு நேரம் தண்ணீரும் உரமும் போட்டு வளர்த்து வந்தார்.

ஆலமரத்திற்கு சுற்றிலும் இருந்த பாதுகாப்பையும் கட்டுப்பாட்டையும் பார்த்த அதற்கு எதிரே இருந்த காட்டுச்செடி ஒன்று, ஆலமர செடியை நோக்கி; இப்படி ஒரு வாழ்க்கை உனக்குத் தேவையா..? எங்களை பார் நாங்கள் எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறோம். நினைத்தபடி வளைந்து நெளிந்து வளர்கின்றோம். ஆனால் நீயோ, தடியால் கட்டப்பட்டு கூண்டுக்குள் அடைப்பட்டு கிடக்கிறாய்"

என ஏளனம் செய்து சிரித்தது.

இதைக் கேட்ட ஆலமரச்செடியும் சற்று யோசிக்க ஆரம்பித்தது. நானும் பிற செடிகளை போல சுதந்திரமாக வாழ்ந்தால் என்ன? என்னைப் பிடித்து ஒரு தடியில் கட்டி வைத்திருக்கிறார்கள், மட்டுமா சுற்றி வேலி அடைத்து வைத்திருக்கிறார்கள். எப்படியாவது இந்த வாழ்க்கையில் இருந்து வெளியே வர வேண்டும் என்று தனக்குள் நினைத்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அந்த விவசாயி தனது காணியை துப்புரவாக்கும் எண்ணத்தோடு வேலையாட்களோடு வந்தார். வந்தவர் அந்த இடம் முழுவதையும் வெட்டித் துப்புரவு செய்தார். அந்தோ பரிதாபம் ஏளனமாக சிரித்த அந்த காட்டுச்செடி இருந்த இடமும் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டது. அத்தோடு அந்த காட்டுச்செடியும் வெட்டி தூக்கியெறியப்பட்டது.

அந்த வழியாக வந்த விவசாயியின் மகன், இது என்ன செடி அப்பா..? ஏன் இதைச் சுற்றி வேலி அமைத்து வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டான்.

அதற்கு அவனது அப்பா, இதுவா.. இது ஆலமரச்செடி, இது மற்றைய செடிகளைப் போன்று வேகமாக வளர்ந்து வேகமாகவே அழிந்து போகின்றது இல்லை. இது பல நூறு வருடங்கள் வாழ்ந்து பயன்படக்கூடியது. அதனால் தான் இதற்கு இவ்வளவு பாதுகாப்பும் கரிசனையும் என்றார்.

அப்போது தான் ஆலமரம் தன்னை கட்டி வைத்திருக்கும் தடியும், தன்னை சுற்றியிருக்கும் வேலியும், தான் இன்னும் நன்றாக வளர்வதற்கு தானே தவிர, தன்னுடைய சுதந்திரத்தை பறிப்பதற்கு அல்ல என்பதை புரிந்து கொண்டது.

ஆம் நண்பர்களே, இந்த வருடத்தின் நிறைவுப்பகுதிக்குள் வந்திருக்கும் நாமும் நம்முடைய வாழ்க்கையில் ஆலமரத்தைப் போன்று வளர வேண்டுமென்றால் நம்முடைய வாழ்க்கையிலும் சில கசப்பான கட்டுப்பாடுகள் இருக்க தான் செய்யும். அதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக கட்டுப்பாடுகள் இல்லாமல் வாழும் மக்களைப் பார்த்து அவர்களைப் போன்று வாழ வேண்டும் என்று எத்தனிக்காமல் ஆண்டவர் உங்களை வைத்திருக்கும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருங்கள். ஒரு நாள் அதன் மகத்துவத்தைப் புரிந்து கொள்வீர்கள்.

**1பேதுரு 5:6 ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலின் மூலமாக இனிய வாழ்த்துக்கள்!

தேவ கிருபையினால் இந்த ஆண்டின் இறுதிவரை பயணிக்க கர்த்தர் கொடுத்த தயவுக்காக ஸ்தோத்திரம். பல போராட்டங்களை, வியாதிகளை, நெருக்கடிகளை, அவமானங்களை, வெறுமைகளை கடந்து வர கர்த்தர் உதவி செய்தார்.

**சங்கீதம் 119:92 உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.**

ஆம் கர்த்தருடைய வசனம் எம்மை இந்த நாள் வரை தாங்கியதே...!

வரப்போகும் புதிய ஆண்டிலும் தேவன் எம்மை நிறைவாக நடத்துவார் என்பதில் சந்தேகமில்லை. ஆமென்.

**சங்கீதம் 103:2 என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.**

ஆம் எனக்கு அன்பானவர்களே! தேவன் எங்கள் ஒவ்வொருவருக்கும் செய்த உபகாரங்கள் அதாவது நன்மைகள், ஈவுகள் அதிகமானவை, எண்ணிக்கைக்கு அடங்காதவை. அப்படிப்பட்ட நன்மைகளை தேவனிடம் பெற்ற நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக காணப்படுகின்றோமா?

எம்முடைய ஆத்துமா அதற்காக தேவனுக்கு நன்றியுள்ளதாக இருக்கின்றதா?

ஆத்துமா நன்றியுள்ளதாக இருப்பது சரீரத்தின் செயல்களினாலே அல்லது கிரியைகளினாலே தெரியும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

தாவீதின் ஆத்துமாவுக்கு தேவன் எப்படிப்பட்ட நன்மை செய்தார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கீதம் 103:3 அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,**

ஆம் பிரியமானவர்களே நாம் எதற்கு முதலாவதாக தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக காணப்பட வேண்டும் என்றால் அது எம் 'அக்கிரமங்களையெல்லாம்' தேவன் மன்னித்ததற்கே.

பிரியமான சகோதரனே, சகோதரியே அக்கிரமம் என்றால் என்ன என்று கேட்கிறீர்களா?

இந்த பூமியிலே ஒரு மனிதன் நன்மை இன்னதென்றும் தீமை இன்னதென்றும் அறியும் அறிவை அடைந்த பின்பு மனப்பூர்வமாக தெரிந்து செய்யும் பாவம் அனைத்தும் அக்கிரமமேயாகும்.

அன்பானவர்களே நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத மனிதனாக இருந்து தவறு, தப்பு என்று தெரிந்தும் பாவத்தை செய்து அக்கிரமத்திலே தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?

பிரியமான சகோதரனே இயேசு உங்களை நேசிக்கிறார்.

**ஏசாயா 53:5**இல் தீர்க்கதரிசி சொல்கின்றார்: **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.** என்பதாக. நமக்கு உண்டாகும் இரட்சிப்பு அல்லது பாவ மீட்பைக் குறித்து சொல்லும் போதே தீர்க்கதரிசி இப்படியாக கூறுகின்றார்.

**நம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமாக செய்த பாவங்கள் எல்லாமே அக்கிரமம் தான்.**

நல்ல செய்தி என்னவென்றால்; 2023 ஆண்டுகளுக்கு முன்பாக தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து எம்முடைய அக்கிரமங்களின் நிமித்தமாக நொறுக்கப்பட்டார்.

இப்பொழுது யாரெல்லாம் இயேசுவிடம் வந்து தங்கள் பாவங்களை அக்கிரமங்களை கண்ணீரோடு அறிக்கையிட்டு மனமாறுதலுக்கு தங்களை அர்ப்பணிக்கின்றார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு விடுதலை கொடுக்க இயேசு ஆயத்தமாயிருக்கிறார்.

நண்பனே நீ ஒருவேளை இயேசுவை ஏற்றுக் கொண்டும் அக்கிரமத்திலே வாழ்கின்றாயா? இயேசு மறுபடியும் உனக்கு இரங்குவதற்கு ஆயத்தமாக காத்திருக்கிறார். பாவத்தைவிட்டு வெளியே வா. மனந்திரும்பு. மறுபடியும் தீமைக்குள்ளாகாதபடி உன்னைக் காத்துக்கொள். கர்த்தர் உனக்கு உதவி செய்வார்.

ஒரு மனிதன் தெரிந்து அறிவோடு செய்யும் எல்லா அக்கிரமமான பாவத்திற்கும் பின்பதாக நோய் என்ற ஒன்று உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை; அக்கிரமத்தை அடக்கி வைத்தால் எம் சரீரம் உரு வழிந்து போகும். எலும்புகளில் வியாதி யுண்டாகும். சரீரம் வறண்டு பெலனற் றுப் போகும்.

அதனால் தான் தாவீது அனுபவமாக சொல்கின்றார்: **சங்கீதம் 32:3-5 (3.) நான் அடக்கிவைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. 4. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டு போயிற்று. (சேலா.) 5. நான் என் அக்கிர மத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல் களைக் கர்த்தருக்கு அறிக்கையிடு வேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சேலா.)**

நாம் எம்முடைய அக்கிர மத்தை அறிக்கையிடும் போது தேவன் எம் பாவத்தின் தோஷத்தை மன்னிக் கிறார்.

பாவத்தினால் உண்டாகும் தோஷம் அது வியாதியை குறிக்கின்றது.

நாம் உண்மையாக அக்கிர மங்களை, பாவங்களை அறிக்கை யிட்டு மன்னிப்பு கேட்டால் தேவன் தோஷத்தோடு கூட மன்னித்து விடுதலை தருவார்.

சில பொல்லாத வியாதி களுக்கு காரணம் என்ன? நீங்கள் திட்டமிட்டு செய்த பாவமே. சரியான மனந்திரும்புதல் பூரண ஆரோக்கி யத்தை கொண்டு வரும்.

அதனால் தான் தாவீது பாடுகின்றார்; என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம்மன்னித்தார். நோய்களையெல்லாம் குணமாக்கி னார் என்பதாக.

அக்கிரமம் மன்னிக்கப்படும் மனிதனுக்கு இயேசுவின் தழும்பு களால் சுகமும் உண்டு. இது சத்தியம். **ஏசாயா 53:5C அவருடைய தழும்பு களால் குணமாகிறோம்.**

**சங்கீதம் 103:4 உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினா லும் முடிசூட்டி,**

பிரியமான சகோதரனே, சகோதரியே எத்தனை தடவைகள் நம்மை தேவன் மரணத்திலிருந்து காத்தார்.

பெரிதான விபத்துக்கள், பொல்லாத வியாதியின் மரணப்படுக் கைகள், தற்கொலை எண்ணங்கள், பலதரப்பட்ட சதிமோசங்கள்... இப்படி எத்தனை அழிவுகளுக்கு ஜீவனை தப்புவித்தார்.

அறிந்தும் அறிந்தும் பாவம் செய்த வேளைகள் எத்தனை முறை கிருபை இரக்கங்களை காண்பித்தார். அளவில்லை. சொல்ல முடியாத காரியமல்லவா அது.

**சங்கீதம் 103:5-6 (5.) நன்மையினால் உன் வாயைத் திருப்தி யாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போலாகிறது. 6. ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.**

நாம் ஒடுக்கப்பட்ட நேரங்கள், மறக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மறுதலிக் கப்பட்ட சூழ்நிலைகள், எம் நியாயம் செல்லுபடியற்றதாக போன நிலைமை கள், கேட்பார் அற்றுக் கிடந்த தடவைகள்

கர்த்தர் நமக்காக நீதியையும் நியாயத்தையும் செய்கிறவர். ஆமென்.

இது தான் கர்த்தர் நமக்கு செய்த உபகாரம்.

அதே போல் வெளிப்பிரகாரமாக எத்தனை நன்மைகளை தேவனிடமி ருந்து நாம் பெற்றிருக்கிறோம். அந்த உபகாரங்களுக்கு நன்றியுள்ளவர் களாக இருக்கின்றோமா?

**1நாளாகமம் 32:25 எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத் தக்கதாய் நடவாமல் மனமேட்டிமை யானான்.**

மரணம்நெருங்கிய மனிதனுக்கு மறுவாழ்வு கொடுத்து பதினைந்து ஆண்டுகள் கூட கொடுத்து கூடவே சரீரத்தில் பூரண சுகத்தையும் கொடுத்தது.

மாத்திரமல்ல அந்த பதினைந்து ஆண்டுகளுக்குள்ளே தான் அடுத்த ராஜ்யபாரத்திற்கு ஓர் ஆண் பிள்ளை யையும் கொடுத்து (மனாசே ராஜாவா கும் போது அவனுக்கு பன்னிரண்டு வயது) இப்படிப்பட்ட உபகாரங்களை காண்பித்த தேவனுக்கு முன்பாக மேட்டிமையாக நடந்து சந்ததிக்குள்ளே சாபத்தை தேடின மனிதனாக மரித்தான் ராஜா எசேக்கியா.

பிரியமானவர்களே நாமும் தேவன் செய்த எத்தனை உபகாரங் களை மறந்தவர்களாக நம்முடைய மனமும் மாமிசமும் விரும்பியபடி வாழ்ந்து கொண்டிருக்கி றோம்.

உபகாரங்களை நினைப்போம். தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்நாள் முழுவதும் வாழ்வோம். அதே போல சக மனிதர்கள், திருச்சபை நமக்கு செய்த உபகாரங்கள் நன்மை களையும் மறக்காமல் நன்றியோடு ஜீவிப்போம். புதிய ஆண்டில் கர்த்தர் நம்மை நிறைவாக நடத்துவார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வந்தனின் மகன்

❑ ஜசிந்தா அக்கா




பலவிதமான பொருட்களை வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி இருந்தார். அவர் மிகவும் செல்வந்தனும் எல்லாராலும் விரும்பப் படத்தக்கவருமாய் இருந்தார். தேவனுக்குப் பயந்து நேர்மையாய் வியாபாரம் செய்யும் இவருக்கு மகன்மார் இரண்டு பேர் இருந்தார்கள். தேவனுக்குப் பயப்படும் பயத்தை அவர்களுக்கும் கற்றுக் கொடுத்திருந்தாலும் இளைய மகன் தன் மனம் போன போக்கிலே நடந்து கொண்டிருந்தான். குடும்பத்தினர் ஆலயம் செல்லும் போது இளைய மகன் நண்பர்களோடு ஊர் சுற்றப் போய்விடுவார்.

ஒரு நாள் இளைய மகன் "அப்பா நீங்கள் வைத்திருக்கும் சொத்துக்களில் எனக்குரிய பங்கைப் பிரித்துத்தாருங்கள்" என்றான். அப்பா அதிர்ச்சியடைந்தார். மகனே ஏற்ற வேளையில் உனக்குத் தருவேன்......" மகன் அதை ஏற்க மறுக்க, அப்பா சொத்தைப் பிரித்துக் கொடுத்தார். தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான். தூர தேசம் சென்ற அவனை நண்பர்கள் சூழ்ந்து கொண்டார்கள். குடித்து வெறித்தார்கள், விடுதிகளில் தங்கி உண்டு மகிழ்ந்தார்கள். மனம் போல் பணத்தை செலவு செய்தார்கள். பணமும் கரைந்து விட்டது. நண்பர்களும் ஒவ்வொன்றாகக் கலைந்து மறைந்துவிட்டனர்.

இளைய மகன் தனித்த இருண்ட பாதையில் நடக்கத் தொடங்கினான். வேலை இல்லை, கையில் பணமும் இல்லை. உதவி செய்வார் யாரும் இல்லை. உல்லாசமாய் விடுதியில் படுத்து உறங்கியவனுக்கு வீதியே படுக்கையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் சில பணத்தைப் பெற்றுக் கொண்டான். கடுமையாய் வியாதியால் தாக்கப்பட்டான். வியாதிப்படும் போது தன் அருகில் இருக்கும் தாயையும், மருத்துவரிடம் விரைந்து செல்லும் தன் தந்தையையும் நினைத்துக் கலங்கினான். அப்பா பெரிய செல்வந்தன், வீட்டில் அனேக வேலைக்காரர், திருப்தியாய் சாப்பிட்டு சந்தோஷமாய் இருக்கிறார்கள். நான் எல்லாவற்றிலும் குறைவுபட்டு வீதியில் இருக்கிறேனே. நான் அப்பாவிடம் சென்றால் என்னை ஏற்றுக் கொள்வாரா? எப்படி அவரது முகத்தைப் பார்ப்பேன்? என்று சிந்தித்துக் கலங்கினான். பின் அப்பாவிற்கு ஒரு கடிதம் எழுதினான்.

'அப்பா நான் உங்களிடம் வர விரும்புகின்றேன். உங்களுடைய மகன் என்று அழைக்கப்படுவதற்கு இனி எனக்குத் தகுதியில்லை. உங்கள் வேலைக்காரரில் ஒருவனாக என்னையும் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு சம்மதமானால் வீட்டிற்கு முன் இருக்கும் மரத்தில் ஒரு வெள்ளைக் கைக்குட்டையைக் கட்டி விடுங்கள். நான் கைக்குட்டையைக் கண்டால் புகையிரத நிலையத்திலிருந்து வீட்டிற்கு வருவேன். கைக்குட்டையைக் காணாவிட்டால் தொடர்ந்து சென்று விடுவேன்' என்று எழுதி கடிதத்தை அப்பாவிற்கு அனுப்பி வைத்தான்.

தனது அப்பா வீட்டை நோக்கி பயணம் செய்ய ஆரம்பித்தான். கைக்குட்டையைப் பார்ப்பேனா என தயக்கமும், படபடப்பும் அவனை வாட்டியது. ரயில் பாதை அவனது வீட்டுப்பக்கமாகவே இருந்ததினால் வீட்டை நெருங்கும் போது மிகுந்த தயக்கத்தோடு தான் குறிப்பிட்ட மரத்தைப் பார்த்தான். ஆச்சரியத்தால் அதிர்ந்து போனான். ஒரு கைக்குட்டையைத் தானே கேட்டேன். ஆனால் மரம் முழுவதும் வெள்ளைக் கைக்குட்டைகள் கட்டப்பட்டிருக்கிறதே.

ஒரு கைக்குட்டையை தன் மகன் காணாமல் போய்விடுவானே! என்று நினைத்து மரம் முழுவதிலும் வெள்ளைக் கைக்குட்டைகளைக் கட்டியிருந்தார் அப்பா. இது தான் தகப்பனின் அன்பு. அப்பாவிடம் வந்த மகனின் உறவு எப்படி இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

'பிள்ளைகளே உங்களுக்கும் ஒரு பரம தகப்பன் இயேசு இருக்கிறார். அவர் ஐசுவரிய சம்பன்னர். அவரோடு உங்கள் உறவு எப்படி இருக்கிறது? உங்கள் உறவை சரி செய்யுங்கள்'

**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற அவருக்கு மகிமை உண்டாவதாக.**

**எபேசியர் 3:20-21**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ◎ | | | | | | | | 01 |
| 03 | 02 | | | | | ◎ | ◎ | |
| | | 04 | | | | ◎ | | |
| | 05 | | | | | ◎ | | |
| | ◎ | ◎ | ◎ | | | | 06 | ◎ |
| | 07 | | | ◎ | ◎ | ◎ | | |
| ◎ | | ◎ | ◎ | | | | 08 | |
| ◎ | | ◎ | | | | | 09 | |
| 11 | | | | | ◎ | | | 10 |

**இடமிருந்து வலமாக**

# குறுக்கெழுத்துப் போட்டி 116

02. இவனின் மறுபெயர் யெருபாகால்
04. தீமோத்தேயுவின் பாட்டி
05. சிதேக்கியாவின் மறுபெயர்
07. தளவாடங்களிருக்கிற இடத்தில் ஒளித்துக் கொண்டிருந்த ராஜா
11. குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் உட்கார்ந்திருந்த ராஜா

---

**வலமிருந்து இடமாக**

01. பார்வோன் யோசேப்புக்கு சூட்டின பெயர்
06. இஸ்ரவேல் புத்திரர் நடுவே தங்களுக்கு சுதந்திரம் இல்லாதவர்கள்
08. பார்வோனுக்காகக் கட்டப்பட்ட பண்டசாலைப் பட்டணங்களில் ஒன்று
09. யோவாகாசின் அம்மா
10. 'கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளே' எனக் கூறப்படும் பெண்

---

**மேலிருந்து கீழாக**

01. எலிசாவின் அப்பா
03. தாவீது தப்பவிட்ட யோனத்தானின் குமாரன்
07. 'அகோலாள்' என்பதன் அர்த்தம்

---

**கீழிருந்து மேலாக**

05. 'கர்த்தர் கவனித்துக் கேட்பார்' என்று சொன்ன தீர்க்கதரிசி
09. இவன் கர்வாலி மரத்தண்டையிலே ராஜாவாக்கப்பட்டான்
10. 'பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது' என்று சொன்னவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வை.தேவதாஸ்




எனக்கு அருமையான அன்பு சகோதர சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள்.

எப்படி? எல்லோரும் நலம் தானே. உங்கள் தொழிற்பிரயாசங்கள் எப்படி போகின்றது? வருமானங்களைக் குறித்து சோர்ந்து போகவேண்டாம். தொடர்ந்து பிரயாசப்படுங்கள். கர்த்தர் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார். அவர் உங்களைக் கைவிடமாட்டார்.

மேலும் அனல் சஞ்சிகையானது உங்களுக்கு எவ் வகையில் உபயோகமாக உள்ளது என்பதை எங்களுக்கு தெரியப்படுத்த மறக்க வேண்டாம். குறிப்பாக வாலிபர் வளாக செய்திகள் எவ் வகையில் உங்களுக்கு பலனளிக்கிறது என்பதனையும் தெரியப்படுத்துங்கள். ஏனெனில் இவைகளை மிகுந்த ஜெபத்துடனும், பல அர்ப்பணிப்புக்களுடனுமே எழுதுகின்றோம். அவைகளை உதாசீனம் செய்ய வேண்டாம்.

அருமையான தேவ பிள்ளைகளே! என் ஆவிக்குரிய வாழ்க்கையில் அடிக்கடி தடுமாறுகின்றேனே, எனக்கு சரியான ஆவிக்குரிய பெலன் இல்லையே, என் விசுவாசம் குன்றிப்போயுள்ளதே... என்றெல்லாம் கலங்குகின்றீர்களா? சோர்ந்து போகவேண்டாம். இவ் வேத வசனத்தைப் பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏசாயா 42:3 அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.**

நீங்கள் நெரிந்து போய் இருக்கலாம். ஆனால் தேவன் உங்களை முறிக்கமாட்டார்; நீங்கள் மங்கியெரிந்து கொண்டிருக்கலாம்; தேவன் உங்களை அணைக்கமாட்டார்.

உங்களைக் காயம் கட்டுகின்ற நல்ல தகப்பன் உங்களுக்குண்டு. உங்கள் மனப்புண்ணில் எண்ணெய் தடவி அவர் உங்களுக்கு ஆறுதல் கொடுப்பார்.

உங்களை பிரகாசிப்பிக்கக்கூடிய வல்லமையுள்ள தேவன் உங்களுக் குண்டு. அவர் உங்களை சுடர்விடப்பண்ணுவார். நிச்சயம் நீங்கள் எரிந்து பிரகாசிப்பீர்கள். நீங்கள் மங்கிப் போவதில்லை.

நீங்கள் முறிந்து போகமாட்டீர்கள்; நீங்கள் அணைந்து போகமாட்டீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தொடர்ந்து வாலிபர் வளாக தொடர் படிப்பினைக்குள் செல்வோம் வாருங்கள்.

பேதையான வாலிபன் ஒருவன் உணர்ச்சிகளைத் தூண்டும் வார்த்தைகளுக்கு செவி கொடுத்த சம்பவத்தை பார்ப்போம்.

**நீதிமொழிகள் 7:16-18 (16.) என் மஞ்சத்தை இரத்தின கம்பளங்களாலும், எகிப்துதேசத்து விசித்திரமான மெல்லிய வஸ்திரங்களாலும் சிங்காரித்தேன். 17. என் படுக்கையை வெள்ளைப்போளத்தாலும் சந்தனத்தாலும் இலவங்கப்பட்டை யாலும் வாசனை கட்டினேன். 18. வா, விடியற்காலம்வரைக்கும் சம்போகமாயிருப் போம், இன்பங்களினால் பூரிப்போம்.**

அந்த வாலிபனுக்குள் இருக்கும் இச்சைகளை அதிகரிக்கும் வண்ணமான வார்த்தைகளை இப் பெண் பேசுவதைக் காண்கிறோம். எப்படியாவது அவனை உணர்ச்சிவசப்படுத்திவிட வேண்டும் என்பதே அவளது இலக்காக இருந்தது.

அந்த வாலிபனும் தனது இச்சைகளைத் தூண்டும்படியான வார்த்தை களுக்கு செவிகொடுத்தான். அவளது ஆசை வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு அவள் பின்னே சென்றான். எதனையும் நிதானிக்காமல் உணர்ச்சிகளின் வேகத்தில் அவன் எடுத்த முடிவு அவள் பின்னே போவது. அவனுக்கு என்ன நிகழ்ந்தது?

**நீதிமொழிகள் 7:23 அம்பு அவன் ஈரலைப் பிளந்தது.**

இதனை வாசிக்கின்ற அன்பு சகோதரனே! சகோதரியே! இப்படித்தான் இன்றும் உங்கள் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய அநேக சோதனைகளை நீங்கள் கடந்து போகவேண்டி வரும். உங்கள் முடிவுகளும் பரிதாபமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிடாதபடி உணர்ச்சிகளுக்கு கட்டுப்படாமல் தேவ வார்த்தைக்கு கட்டுப்பட்டு வாழுங்கள். ஏனெனில் உணர்ச்சிகளின் வேகத்திற்கு செயற்படுதலானது ஆரம்பத்தில் மகிழ்ச்சிகரமாக அமைந்தாலும் அதன் முடிவு மரண வேதனையே.

மனிதனுககுள் தீய எண்ணங்களால் உணர்வுகள் எவ்வளவு தூண்டப் படுகின்றதோ அவ்வளவுக்கு நல்ல எண்ணங்களும் நல்ல செயல்களிற்காக அவனது உணர்வுகளைத் தூண்டக்கூடியதாக உள்ளது.

அதே நேரம் உணர்வுகளின் போராட்டத்தில் நாம் இருக்கும் வேளையில் அவ் உணர்வுகளை நல்ல முறையில் தூண்டக்கூடிய நல்ல மனிதர்களும் இருப்பார்கள். தீய முறையில் தூண்டக்கூடிய கெட்ட மனிதர்களும் இருப்பார்கள்.

ரெகொபெயாமின் உணர்வுகளை முதியோர் நல்ல முறையில் தூண்ட முயற்சித்தனர். ஆனால் அதனை விரும்பாத ரெகொபெயாம் வாலிபர்களை நாடினான். அவர்கள் அவனது உணர்வுகளைத் தீய முறையில் தூண்டினார்கள்.

தாவீதின் மகனாகிய அம்னோன் உணர்ச்சிகளின் கொந்தளிப்பிற்குள் சிக்கியிருக்கும் போது அவனது உணர்ச்சிகளை தீய முறையில் கொதிப்பேற்றிய சிநேகிதனைக் குறித்து வேதாகமத்தில் காண்கிறோம்.

**11சாமுவேல் 13:1-2 (1.) இதற்குப்பின்பு தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் பேருள்ள சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள்; அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொண்டான். 2. தன் சகோதரியாகிய தாமாரின் நிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னியாஸ்திரீயாயிருந்தாள்; அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.**

அவள் மேல் அவனுக்கு மோகம் உண்டானது. இருப்பினும் தனது உணர்ச்சிகளை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சி எடுத்தான்.

இவனது உணர்ச்சிகளைத் தீய முறையில் தூண்டிய சிநேகிதனைக் குறித்து பார்ப்பதற்கு முன்பதாக மோகத்தைக் குறித்து சிறு குறிப்பை எழுத விரும்புகின்றேன்.

- மோகம் உடனடி இன்பத்தைத் தரும்; அன்பு காத்திருக்கும்.
- மோகம் தன் ஆசையை நிறைவேற்றத் துடிக்கும்; அன்பு துணையின் மகிழ்ச்சியை நாடும்.
- மோகம் முரட்டுத்தனமாக நடக்க வைக்கும்; அன்பு மென்மையாகவும், விட்டுக்கொடுப்புடனும் நடக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மோகம் விருப்பம் நிறைவேறியதும் தணிந்து போகும்; அன்பு அழியாது.
- மோகம் கொடியது; அன்பு இனிமையானது.
- மோகம் வெறுப்பைக் கொண்டுவரும்; அன்பு பாசத்தைக் கொடுக்கும்.
- மோகம் திருப்திப்படாது; அன்பு மனநிறைவைக் கொடுக்கும்

இப்படியே மோகத்தையும்; அன்பையும் குறித்து சொல்லிக் கொண்டு போகமுடியும். பிரியமான சகோதர சகோதரிகளே! தங்களது காமப்பசியை தீர்க்கும்படி போலிப்பாசத்தை காட்டி தங்கள் மோக வலைக்குள் சிக்க வைப்பவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

மோகமானது ஆரம்பத்தில் அன்பு போன்று தோன்றுவதால் தான் அநேகர் ஏமாந்து போகின்றார்கள். பலர் கேட்கும் கேள்வி 'அவர் என்னை நேசிக்கின்றாரா? இல்லையா? என்பதை எப்படி கண்டுபிடிப்பது?'

இதற்குப் பதில் பொறுமை தான். ஆம் பிள்ளைகளே உணர்ச்சிகளின் வேகத்திற்கு அலைவுபடாமல் பரிசுத்தம் எனும் நங்கூரத்தைப் போட்டு நீங்கள் பொறுமையாக இருந்தால் உங்களை சூழ்ந்திருப்பது மோகமா? அன்பா? என்பதனை நீங்கள் இனங்காண முடியும். பொறுமையாக இருங்கள்; பொறுமையாக இருங்கள்.

இப்பொழுது அம்னோனின் சம்பவத்திற்கு வருவோம். அம்னோன் தாமார் மீது மோகங்கொண்டு அவளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தான். ஏங்கி ஏங்கியே அவன் வியாதியடைந்தான். தாமாரை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவன் வாழ்ந்து கொண்டிருந்தான். ஆனாலும் அதற்கான வழியை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதே நேரம் அவளுக்கு தீங்கு செய்யவும் அவனுக்கு மனம் இடங் கொடுக்கவில்லை.

**11சாமுவேல் 13:2b அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.**

ஒரு மனிதன் வாலிபப்பருவத்தை அடையும் பொழுது வாலிபத்திற்குரிய உணர்ச்சிகள் செயற்படுவது இயற்கையே. அவ் உணர்வுகளை சரியான முறையிலா? அல்லது தவறான முறையிலா பயன்படுத்துவது என்பது அவரவரைப் பொறுத்ததே.

அது பாலியல் உணர்வுகளாக இருக்கலாம், கோபத்தின் உணர்வுகளாக இருக்கலாம், அதிகார வெறிகளாக இருக்கலாம், ஏதோவொரு இலட்சிய வெறியாகக்கூட இருக்கலாம். அதனை நாம் எப்படிக் கையாளுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. இவ் வகையில் அம்னோன் தனக்குள் எழும்பிய உணர்வுகளை சரியாகக் கையாள முடியாமல் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான்.

இந் நேரத்தில் தான் அம்னோனின் நண்பன் அவனைத் திசை திருப்புவதனைப் பார்க்கிறோம். எப்படி ரெகொபெயாமை அவனது நண்பர்கள் தவறான முறையில் உசுப்பேற்றினார்களோ (எனது தமிழை பொறுத்துக் கொள்ளவும்) அவ்வாறே அம்னோனை அவனது நண்பனாகிய யோனதாப் திசை திருப்பினான்.

**11சாமுவேல் 13:3 அம்னோனுக்கு தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான்; அந்த யோனதாப் மகா தந்திரவாதி.**

சிநேகிதர்கள் நமக்கு அவசியம் தான். ஆனால் நமக்கு யார் சிநேகிதர்களாக இருக்கின்றார்கள் என்பது அதனைவிட அவசியம். ஆகாத நண்பர்களை பட்டாளமாகக் கொண்டிருப்பதைவிட தனித்து நிற்பது சிறந்தது. ஏனெனில் கூடா நட்பு இக் காலத்தில் மிகவும் அதிகரித்து வருகின்றது.

நண்பர்களுடன் சுற்றுலாக்கள் சென்று தங்கள் கற்பை இழந்தவர்கள் அதிகம் பேர் இன்றுமுண்டு. நண்பர்கள் கொடுக்கும் பொருட்கள், பிஸ்கட், ரொபி, கன்டோஸ், கோப்பி, குளிர்பானங்கள் போன்றவற்றை ஏற்றுக் கொண்டு அவற்றுக்குள் உள்ள மருந்துகளால் மயக்கமடைந்து கற்பை பறிகொடுத்த வர்களும், விபச்சார விடுதிகளில் சேர்க்கப்பட்டவர்களும் அநேகருண்டு.

இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் AIDS போன்ற வியாதிகளால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்களுடனான நட்புகள் பெரும்பாலும் விபரீதத்திலேயே முடிவடைகின்றது.

ரெகொபெயாமின் உணர்வுகளை அவனது நண்பர்கள் தீய முறையில் தூண்டினர். அது போலவே தாமாருக்கு தீங்கு செய்ய மனமில்லாத அம்னோனின் உணர்வுகளை யோனதாப் எனும் நண்பன் தந்திரமாய் தூண்டிவிட்டான். அம்னோனை தன் தகப்பனிடம் பொய் சொல்வதற்கு தூண்டினான்.

பிள்ளைகளே இன்றும் உங்கள் நண்பர்கள் இவ்வண்ணம் உங்களை வஞ்சிக்கப்பார்ப்பார்கள். உன் அப்பாவிடம் பொய் சொல், அம்மாவிடம் பொய் சொல் என உங்களைத் தூண்டுவார்கள். ஏமாந்து போகவேண்டாம்.

யோனதாப் நடந்து கொண்ட விதமானது சாத்தான் நடந்து கொண்ட செயலைப் போலுள்ளது. ஏவாளை தந்திரமாக வஞ்சித்து அவளை பாவத்தில் விழப்பண்ணினான். அது போலவே அம்னோனை யோனதாப் தந்திரமாக பாவத்தில் விழப்பண்ணினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் நம்மை நேசிக்கும் நண்பர்கள் என சொல்லப்படுபவர்களின் சில யோசனைகள் நம்மை பாவத்திற்குள் தள்ளக்கூடியதாக உள்ளது. மிக எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்.

அம்னோன் தன் வாழ்க்கையில் எப்படிப்பட்ட தீர்மானத்தை எடுப்பது என்று அறியாமல் திகைத்துக் கொண்டிருந்த நேரம் உண்மையில் அம்னோன் என்ன செய்திருக்க வேண்டும்? வாலிபப்பருவத்தில் இருக்கும் அம்னோன் தனக்குள் எழும்பிக் கொண்டிருக்கும் ஆசைகள் சரியா? பிழையா? அதனை எப்படி முன்னெடுத்துக் செல்வது? என்பதனைக் குறித்து சரியான விளக்கம் இல்லாதவனாகவே இருந்திருப்பான்.

இதனை வாசிக்கின்ற அன்பு சகோதர சகோதரிகளே! இன்றும் நீங்கள் எந்தப் பருவத்திலும் இருக்கலாம். உங்களுக்குள் எழும்புகின்ற யோசனைகள் சரியா? தவறா? என்ன தான் முடிவு எடுப்பது என்பதனைக் குறித்து நீங்கள் குழப்பமான நிலையில் காணப்படலாம். எல்லா மனிதராலும் எப்பொழுதும் சரியான முடிவுகளை எடுத்துவிட முடியாது. ஆனால் நாம் சரியான முடிவுகளைத் தான் எடுக்க வேண்டும்.

அம்னோன் தன் வாழ்க்கையில் குறிப்பாக தனது வாலிபப் பிராயத்தில் சரியான முடிவை எடுக்க அவன் என்ன செய்திருக்க வேண்டும்? என்பதனைக் குறித்து வேதாகம அடிப்படையில் சில தீர்வுகளை முன்வைக்க விரும்புகின்றேன். இவைகளோடு உங்கள் வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படி கேட்கின்றேன்.

அம்னோன் என்ன செய்திருக்க வேண்டும்?

## 1. தன்னைப் படைத்த கர்த்தரை நாடியிருக்க வேண்டும்

தன்னை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு தெய்வம் உண்டு என்பதனை அம்னோன் அறிந்திருக்க வேண்டும். அம்னோன் கர்த்தரை அறியாத குடும்பத்தில் பிறந்தவன் அல்ல. மாறாக 'கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவன்' என்ற பெயரை எடுத்த தகப்பனிற்கு பிறந்தவன். ஆனாலும் அம்னோன் இவ் விடயத்தில் கர்த்தருடைய வழிநடத்தலை தேடியிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை.

**ஏசாயா 30:21 நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.**

ஆம் அருமையானவர்களே! நாம் வழி தவறும் போது இது தான் சரியான வழி என்று நமக்குச் சொல்லக்கூடிய கர்த்தர் நமக்கு இருக்கின்றார். அவருடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்தை கேட்கும்படி அவர் பாதத்தில் காத்திருப்போமானால் நிச்சயம் அவர் நம்மோடு பேசி நம்மை வழிநடத்துவார்.

**சங்கீதம் 119:9 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே.**

எமது வாழ்க்கையில் நாம் நல்ல தீர்மானங்களை எடுப்பது எப்படி? நாம் நமது வாழ்க்கையை சுத்தமாக காத்துக்கொள்வது எப்படி, இவைகளுக்கான பதிலை இவ் வசனம் சொல்கின்றது. கர்த்தருடைய வேத வசனங்களை நாம் வாயினால் சொல்வது மட்டும் போதாது; அதனை நமது காதினால் கேட்பது மட்டும் போதாது; அத்தோடு அவ் வேத வசனங்களை நமது இருதயமாகிய பலகையிலே எழுதி வைத்திருக்க வேண்டும். அவ் வேத வசனங்களை மீறி எமது வாழ்க்கையை நடத்தாமல் அவ் வசனங்களிற்கு கட்டுப்பட்டு நடப்பதே எங்கள் வாழ்க்கையை சுத்தமாக வைத்திருக்க உதவி செய்யும். வேதாகம வசனங்களை எமது வீட்டுச் சுவர்களிலும், எமது வாகனங்களிலும், எமது ஆடைகளிலும் எழுதி வைத்திருப் பதனைவிட அதனை எமது இருதயத்தில் எழுதி வைப்பதே மிகச் சிறப்பு. வேதாகமத்தை கடமைக்கு தியானிக்காமல் அதனை மன மகிழ்ச்சியோடு தியானித்து எமது இருதய பொக்கிஷத்தில் வைக்கும் பொழுது அது நம்மை சரியான பாதையில் வழிநடத்தும்.

வாசகப் பெருமக்களே! உங்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாக உங்கள் தெய்வம் உங்களோடேயே இருக்கின்றார். அவருக்கு நீங்கள் காத்திருங்கள். அவர் உங்களை சரியானபடி வழிநடத்துவார்.

ஆனால் அம்னோனோ இவ் விடயத்தில் கர்த்தரின் வழிநடத்தலை அவன் தேடவில்லை.

## குறுக்கெழுத்துப் போட்டி - 115, வினா விடை - 117

### சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**
01. நா.கிருஷன்
02. நா.சிவபாக்கியம்
03. வி.அனுராதா
04. ர.தர்சிகா

**தர்மபுரம்**
05. பி.சுடர்

**பொன்னாலை**
06. த.றசாந்தினி
07. வி.றதிகா
08. கோ.கோகுலறாஜ்
09. கோ.யிதர்சன்
10. டெ.மவுசிகா
11. த.றங்கன்
12. ற.விதுஷா

**திருநெல்வேலி**
13. ந.செல்வன்

**கனடா**
14. குகன் குடும்பம் +

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் மகளே பொறுத்திரு...




❒ திருமதி. J.பிலிப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவ கிருபையினால் இவ் வருடம் பூராகவும் அனலின் பெண்கள் பக்கத்தில் பெண்களுக்காய் செய்திகளை வெளியிட கர்த்தர் கிருபை செய்தார். அவருக்கே எல்லா துதி, கனம், மகிமை உண்டாவதாக.

2023ஆம் ஆண்டின் இறுதி நாட்களுக்குள் வந்துவிட்டோம். அனலின் பெண்கள் பக்கம் எங்களைப் பார்த்து கூறுகிறது: **என் மகளே பொறுத்திரு.** இன்னுமா நான் பொறுத்திருக்க வேண்டும்? என்று சிந்திக்கிறாயா? தேவன் உன்னைப் பார்த்து **பொறுத்திரு** என்றால் **பொறுத்திரு.** அப்போது தேவனுடைய வழிநடத்துதலையும் ஆசீர்வாதத்தையும் நீ காண்பாய்.

**1பேதுரு 5:6 ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**

ஊத்ஸ் தேசத்தில் யோபு என்னும் பெயர் கொண்ட மனுஷன் இருந்தான். அவன் சம்பத்து தேசத்திலே பெருகுகிற நாட்களில் சாத்தான் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்துவிட்டு உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களினால் அவனை வாதித்தான். அவன் ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். அவன் மனைவியோ **பொறுத்திருக்க முடியாமல்** உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? என்றான்.

யோபின் மனைவி சம்பத்து எல்லாம் நிறைவாக இருக்கும் போது எல்லாவற்றையும் அனுபவித்து அமைதியாய் இருந்தவள். இப்போது ஒவ்வொன்றாய் அழிக்கப்படும் போது **பொறுத்திருக்க முடியாமல்** கட்டிய கணவனைப் பார்த்து தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலும் இவ் வருடம் சம்பத்து எல்லாம் குறைந்துவிட்டதா? நீ எதிர்பார்த்த காரியங்கள் இவ் வருடம் நிறைவேறவில்லையா? உன்னைப் பார்த்து தான் தேவன் சொல்கிறார்.

## என் மகளே பொறுத்திரு

நகோமி தன் மருமகளைப் பார்த்து என் மகளே இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று அறியும்படி பொறுத்திரு (ரூத் 3:1-18). நகோமியும் ஒரு விதவை. அவளுடைய மருமகளாகிய ரூத்தும் ஒரு விதவை. மாமி யாகிய நகோமி ரூத்தைப் பார்த்து அவளை திரும்பி தாய் வீட்டிற்கு போகும்படி கூறினாள். ஆனால் ரூத்தோ நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்கும் படி உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று கூறி தன் மாமியை பற்றிக் கொண்டி ருந்தாள்.

ஒரு நாள் ரூத் நகோமியைப்பார்த்து நான் வயல்வெளிக்குப் போய், யாருடைய கண்களில் எனக்கு தயை கிடைக்குமோ, அவர் பிறகே கதிர் களைப் பொறுக்கிக் கொண்டு வருகிறேன் என்றாள். அதற்கு நகோமி என் மகளே போ என்றாள் (ரூத் 2:2).

ரூத் எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடைய வயல் நிலத்தில் சிந்தினதைப் பொறுக்க அனுமதி பெற்று கதிர்களை பொறுக்கி தன் மாமி தனக்கு கற்பித்தபடியெல்லாம் (ரூத் 3:6) செய்து மாமியினிடத்தில் திரும்பி வந்த போது அவள் என் மகளே உன் செய்தி என்ன என்று கேட்டாள். அப்பொழுது அவள் அந்த மனிதன் தனக்கு செய்ததையெல்லாம் விவரித் தாள் (ரூத் 3:16). அப்பொழுது அவள் என் மகளே இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு. ரூத் பொறுத் திருந்தாள். கிடைத்த பலன் என்ன? போவாசின் மனைவி யானாள் (ரூத் 4:13). **பொறுத்திருந்ததின்** நிமித்தம் கிடைத்த ஒரு பெரிய ஆசீர்வாதம்.

சகோதரியே உன்னு டைய வாழ்க்கையிலும் ஒரு ஆசீர்வாதம் வேண்டுமா? யோபின் மனைவி போல் பொறுத்திருக்க முடியாமல் தேவனை தூஷிக்கும்படி கண வனைக் கேட்டாள். உன் நிலை என்ன? ரூத் தன் மாமியிடம் காட்டிய அன்பு, பரிவு, தாழ்மை, கீழ்ப்படிதல்.

இதை வாசிக்கும் அருமை தாயே, சகோதரியே நீங்கள் மாமியாராகவும் மருமகளாகவும் இருக்கலாம். உங்களுக்கிடையில் உறவு எப்படிப்பட்டது? ரூத் தன் மாமியாரிடம் நடந்து கொண்டது போல நீங்களும் உங்கள் மாமியாரை மதித்து நடந்து கொள்ளுங்கள். நகோமி ரூத் திற்கு ஒரு நல் வாழ்வு அமைத் துக்கொடுத்தது போல நீங்களும் எல்லாக் காரியங்களிலும் நற்குணசாலியாக வாழ பொறுத்திருக்கும் போது தேவன் உங்களுக்குரிய அசீர் வாதத்தை தருவார்.

**சங்கீதம் 40:1 கர்த் தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிட மாய்ச் சாய்ந்து, என் கூப்பிடு தலைக் கேட்டார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஸ்டேன்லி ஜோன்ஸ்
## 1884 - 1973

### வாழ்க்கையே பேசட்டும்

இந்தியர்களுக்கு இந்திய சமூகப் பண்பாட்டின் அடிப்படையில் சுவிசேஷத்தை அறிவிக்க வந்தவர் ஸ்டேன்லி ஜோன்ஸ். தன்னுடைய கல்லூரி நாட்களிலேயே 'தன்னார்வ மாணவர்கள்' என்ற இயக்கத்தில் இணைந்து வெளிநாட்டிற்கு மிஷனெரியாக செல்ல தீர்மானித்தார்.

இந்தியாவிற்கு வருவதற்கு முன் ஒரு நாள் அவர் ஓரிடத்தில் பிரசங்கிப்பதற்கு சென்றார். அதுவே அவரது முதல் பிரசங்கம். பிரசங்க பீடத்தில் ஏறி நின்றவுடனேயே செய்தி முழுவதும் மறந்து போனது. பேச இயலாதவராக உட்கார்ந்துவிட்டார். அப்போது ஆவியானவர் அவரில் கிரியை செய்தார். பிரசங்கிக்க முடியாவிட்டாலும், ஆண்டவர் உன் வாழ்வில் செய்ததை சொல்லலாமே என்று அவர் உணர்த்தப்பட, அந்நேரமே எழுந்து தன் சாட்சியை பகிர்ந்து கொண்டார். ஆராதனை முடிவில் ஒரு வாலிபன் வந்து தன்னை இயேசுவிடம் அர்ப்பணித்து ஜோன்ஸிடம் ஜெபித்து மறுவாழ்வு பெற்றான்.

இந்நிகழ்ச்சி மூலம் அன்றிலிருந்து தனது வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்கு சாட்சியாக வாழத் தீர்மானித்தார். இந்தியாவிற்கு வந்த ஜோன்ஸ், மெதடிஸ்த போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டார். உயர்ஜாதி மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் அழைப்பை பெற்று, அவர்களிடம் வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்ட சுவிசேஷகனாகப் பணியாற்றினார். ஜாதி, சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் சமமாக வாழ வழி செய்யும்படியாக 'கிறிஸ்தவ ஆசிரமம்' ஒன்றை ஏற்படுத்தினார். மகாத்மா காந்தியின் நண்பராகவும் விளங்கினார்.

இந்தியாவில் 40 வருடங்கள் மிஷனெரியாகப் பணி செய்த இவர் உலகம் முழுவதும் பாராட்டப்பட்டார். பல புத்தகங்களை எழுதி ஆவிக்குரிய வாழ்வில் அதிகமானோரைத் தட்டி எழுப்பினார். உத்தம ஊழியக்காரராகவும், மிஷனெரி ஸ்தாபனங்களுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் வாழ்ந்து காட்டிய ஸ்டேன்லி ஜோன்ஸ் ஓர் மாபெரும் வழிகாட்டி.

**அன்பரே! மக்கள் புரிந்து கொள்ளும்படியாக உங்கள் சுவிசேஷப் பணி அமைகின்றதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** நீ வாழ்கின்ற வாழ்க்கை இறைவனை பிரதிபலிக்காவிட்டால், நீ செய்கின்ற வழிபாடு இறைவனுக்கு ஏற்றதல்ல. — ஜீவநீரோடை

நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 29

---



# ரீஸ் ஹவல்ஸ்
## 1879 - 1950

## முழங்கால்கள் கனக்கட்டும்

சாயத்தால் சாதிக்க முடியாததை, ஜெபத்தால் சாதிக்க முடியும். ஜெபத்தைவிட அதிக பலம் பொருந்திய ஆயுதம் வேறொன்றும் இல்லை. இது உண்மை தானே? நிச்சயம் உங்களால் உண்மை என்றே சொல்ல முடியும்.

ரீஸ் ஹவல்ஸ், ஜெபத்தில் ஒரு புதிய பரிணாமத்தைக் கண்டவர். இவரின் ஜெபம் ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடங்கியதல்ல. தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் ஜெபிப்போர் பலர். ஆனால் பிறருக்காக ஜெபிப்பதிலேயே பேரானந்தம் அடங்கியுள்ளது என்றார்.

பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட ரீஸ் ஹவல்ஸ், பிறருக்காக பரிந்து மன்றாடுவதில் சிறந்தவர். இடைவிடாமல் ஜெபத்திலே தரித்திருந்தவர். ஜெபத்தின் மூலமாக இறைவனுடன் இரண்டறக் கலந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத்துடன் கூடிய ஜெபத்தினால் அநேகர் இவர் மூலம் சுகம் பெற்றார்கள். சரீர சுகத்தைவிட ஆன்மீக சுகத்திலே மிகுந்த அக்கறை உள்ளவராயிருந்தார்.

இங்கிலாந்தின் சுற்றுப்புறங்களில் ஊழியம் செய்த ஹவல்ஸ், கடவுளின் அழைப்பை ஏற்று தென்னாபிரிக்கா சென்றார். எழுப்புதல் கூட்டங்கள் மூலம் மக்களின் ஆன்மீக வாழ்வைத் தட்டி எழுப்பினார்.

நாடோடிகளுக்கு மறுவாழ்வு கொடுத்தார். ஆதரவற்ற குழந்தைகளின் தந்தையானார். ஜெபமே இவரின் வெற்றிக்கு மூலதனமாயிற்று.

தாய்நாடு திரும்பிய ஹவல்ஸ் மாபெரும் வேதாகமக் கல்லூரியை நிறுவினார். ஜெபக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அநேக மிஷனெரிகள் எழுப்பப்பட்டார்கள்.

'பரிந்துரை ஜெபவீரன்' என்றழைக்கப்படும் ரீஸ் ஹவல்ஸ் ஜெபத்தைக் கேட்கும் ஜெயவீரரோடு இணைந்தார்.

**அன்பரே! ரீஸ் ஹவல்ஸை போன்று ஜெப வீரனாக காணப்படுகிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** ஜெபத்தினால் இளைப்பாறுதலை பெறாதவன் இன்னும் இறைவனிடம் வந்து சேரவில்லை. — ஜீவந்ரோடை

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 13**

# வினாவிடை 117

## சரியான பதில்கள்

01. காலேப், யோசுவா - எண்ணாகமம் 32:11, உபாகமம் 1:36-38
02. கர்த்தர் - லேவியராகமம் 20:6
03. இஸ்ரவேலர் - எண்ணாகமம் 21:6-9
04. கோரேஸ் - ஏசாயா 44:28
05. சாமுவேல் - 1சாமுவேல் 7:12
06. லேயாள் - ஆதியாகமம் 29:32
07. எசேக்கியா ராஜா - ஏசாயா 38:9-17
08. யோபு - யோபு 27:5
09. சங்கீதம் 126:3
10. சமாரியாவில் ஒரு ஸ்திரீ -11இராஜாக்கள் 6:26-27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா




**நியாயாதிபதிகள் 13:1-5 (1.) இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார். 2. அப்பொழுது தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானாகிய ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் மனோவா. அவன் மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருந்தாள். 3. கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய். 4. ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. 5. நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திபடலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெலிஸ்தருடைய கையிலிருந்து இஸ்ரவேலை மீட்கும் ஒரு இரட்சகனாக ஆண்டவர் சிம்சோனை அவன் தாயின் கர்ப்பத்தில் உருவாகுமுதல் தெரிந்து கொண்டார். ஆகவே சிம்சோனுக்கு தெளிவான அழைப்பு, தெரிவு இருந்தது. ஆனால் இந்த சிம்சோனுடைய வாழ்க்கையில் அவனுடைய சில காலங்கள் நன்றாகவிருந்தது. அதற்கு பிற்பாடு அவனுடைய பின்னான வாழ்க்கையானது தேவனுடைய அழைப்பை, நோக்கத்தை மறந்து மிகவும் மோசமான பாவத்திற்குள்ளாய் விழுந்து இறுதியாக மரிக்க வேண்டிய சந்தர்ப்பம் அவனுக்கு ஏற்பட்டது.

ஆகவே சிம்சோனுடைய வாழ்க்கையில் இருந்து சில காரியங்களைக் கற்றுக் கொள்ளப் போகின்றோம். அது எங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. சிம்சோன் விழுந்த விதத்தைக் கற்றுக் கொள்ளும் போது, பாவத்தை விட்டு வெளியே வருவதற்கு எமக்கும் உதவியாக இருக்கும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலே யுத்தத்திற்கு செல்லும் போது, ஒரு கூட்டமாய் செல்வார்கள். ஆனால் சிம்சோனோ தனித்தவனாய் யுத்தத்திற்கு செல்வான். அவ்வளவு பெலன் சிம்சோனுக்கு இருந்தது. தேவன் அவனை அற்புதவிதமாக அபிஷேகித்திருந்தார். ஆவியானவர் அவன் மேல் இறங்குகின்ற போது அவன் மெய் சிலிர்க்கின்ற காரியங்களையெல்லாம் செய்தான். ஒரு கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு ஆயிரம் பேரைக் கொன்றான். ஒரு சிங்கத்தைக் கொன்றான். முந்நூறு நரிகளைப் பிடித்து ஒன்றோடொன்று சேர்த்து அதன் வாலைக் கட்டி அதில் பந்தம் கொழுத்தி பெலிஸ்தருக்கு எதிராக செயற்பட்டான். பெலிஸ்தர் அவனைக் கண்டு துவழத்தக்கதாக, பயப்படத்தக்கதாக காரியங்களையெல்லாம் செய்தான். தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டவன். ஆனால் அவன் பாவத்தில் விழுந்த காரணத்தினால் ஆண்டவரால் கொடுக்கப்பட்ட பல ஆசீர்வாதங்களை அவன் இழந்து போனான்.

**நியாயாதிபதிகள் 16:1 பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.**

தேவனுடைய ஊழியக்காரர் ஒருவர் சொன்னார்; இந்த நாட்களில் தேவனுக்கு சார்பாய் நிற்கின்ற, தேவனுடைய வேலையைச் செய்கின்ற தேவ பிள்ளைகளை விழுத்துவதற்கு சத்துரு கையாளுகின்ற மிகவும் பலமான ஆயுதம் இது என்று குறிப்பிட்டார். இரட்சிக்கப்பட்டவர்கள் கூட இந்தக் காரியத்தில் தடுமாறிப் போகின்றார்கள் என்று குறிப்பிட்டார். ஆவிக்குரிய வாழ்வு கெட்டுப் போவதற்கு ஏதுவான சூழ்நிலைகள் உருவாவதற்கு இந்தக் காரியம் அமைகின்றது. இந்த சிம்சோன் இப்படிப்பட்ட பெண்ணைக் கண்டு அங்கே சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிற்பாடு;

**நியாயாதிபதிகள் 16:4 அதற்குப் பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒருஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்.**

சிம்சோன் தெலீலாள் என்ற பெண்ணோடு சினேகமாயிருந்தான். ஆனால் இந்த சம்பவத்திற்கு பிற்பாடு பார்க்கின்ற போது இந்த தெலீலாளை வைத்து சிம்சோனை விழுத்த பெலிஸ்தர் சதி செய்கின்றார்கள். தெலீலாள் என்ற பெண்ணினால் தேவனுடைய நோக்கம், அழைப்பு, பெலிஸ்தரை மேற்கொள்ள வேண்டிய நிலை எல்லாவற்றையும் பெலிஸ்தர் சிம்சோனைவிட்டு அகற்றி விட்டார்கள்.

**நியாயாதிபதிகள் 16:5-6 (5.) அவளிடத்திற்குப் பெலிஸ்தரின் அதிபதிகள் போய், நீ அவனை நயம்பண்ணி, அவனுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப்படுத்தகிறதற்கு எதினாலே அவனை மேற்கொள்ளலாம் என்றும் அறிந்துகொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம் என்றார்கள். 6. அப்படியே தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.**

இப்பொழுது தெலீலாள் தன்னுடைய வார்த்தையை நேரடியாய் சொல்கின்றாள். உன்னை சிறுமைப்படுத்த எதினால் கட்டலாம் என்று கேட்கின்றாள். இந்த வார்த்தையை அவன் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கின்றான்.

நான் தேவனுக்காய் அழைக்கப்பட்டவன், தேவனே என்னை பெலப்படுத்தி வைத்திருக்கிறார். ஆகவே எனது பெலன் எங்கே இருக்கின்றது என்று சொல்லக்கூடாது என்று அவன் நினைத்திருக்கலாம். முதல் மூன்று தரம் பொய் சொன்னான். இவ்வாறு அவன் பாவத்தோடு விளையாடிக்கொண்டு, உறவாடிக் கொண்டிருந்தான். அந்தப் பாவத்தை தொடர்ந்து செய்து கொண்டும் வந்தான். ஆனால் இந்தக் காரியம் சிறிது சிறிதாய் அவனுடைய பெலன் இருக்கின்ற இடத்திற்கு வருகின்றது.

**நியாயாதிபதிகள் 16:16-17 (16.) இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக்கொண்டிருக்கிறதினால், சாகத் தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு, 17. தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்.

இப்பொழுது தன்னுடைய பெலம் எங்கே இருக்கின்றது என்று சிம்சோன் தெலீலாளுக்கு கூறிவிட்டான். ஆண்டவர் சொன்னார்: முத்துக்களை பன்றிகள் முன் போடவேண்டாம். தேவன் கொடுத்த பலத்தின் இரகசியத்தை, தேவனுடைய அழைப்பை அவன் அவளுக்கு சொல்லிவிட்டான். இதனால் அவன் தன்னுடைய அழைப்பை மறந்தான்.

இந்த 16ஆவது அதிகாரம் சிம்சோனின் விழுகைக்கு ஆரம்பமாய் இருந்து தொடர்ந்து அவன் அந்த பாவத்திற்குள்ளேயே விழுந்து விட்டான். ஒரு வேளை உங்களுடைய விழுகைக்கான ஆரம்பத்தை நீங்கள் இன்று ஆரம்பித்திருக்கலாம். அல்லது நேற்றைய தினம் அல்லது சென்ற வாரமோ ஆரம்பித்திருந்தால் இன்றைக்கே அதனை விட்டுவிடுங்கள். இனி அதனைச் செய்ய வேண்டாம். அதை தொடர்ந்து செய்தால் உங்களுடைய ஆத்துமாவிற்கு மோசம் நேரிடும். ஒருவேளை உங்கள் மனைவிக்கு நீங்கள் துரோகம் பண்ணியிருந்தால் உங்களுடைய ஆத்துமா கொல்லப்படுவதற்கு முன்பதாக அவைகளை விட்டு மனந்திரும்புங்கள். சில பாவங்கள் வெளியே தெரியாமல் இருக்கலாம். ஆனால் கர்த்தருக்கு அவைகள் தெரியும். எனவே அவற்றை விட்டு வெளியே வாருங்கள். இல்லையென்றால் உங்கள் ஆத்துமா அழிந்து போய்விடும்.

இப்பொழுது தன்னுடைய இருதயத்தை எல்லாம் சிம்சோன் வெளிப்படுத்திவிட்டான். ஒருவேளை அவனுடைய தலைமயிர் வெட்டப்பட்டிருந்தால் அவனுக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவனுடைய தலைமயிர் சிரைக்கப்பட்டதென்று சொல்லும் போது அது கண்டிப்பாக உணரக் கூடிய ஒரு காரியம். அது அவனுக்கு தெரிந்திருக்க வேண்டும். பவுல் சொல்வது போல்; மனச்சாட்சியிலே சூடுண்டு இருந்திருக்கிறான். வேத ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறுகின்றார்: சிம்சோனுடைய பெலத்தைக் குறித்து கூறும் போது, அவன் காசாவில் இருந்து பட்டணத்து வாசல் கதவுகளையும் அதன் இரண்டு நிலைகளையும் தூக்கிக் கொண்டு மலை ஏறினான். அந்த மலை மிகவும் மந்தாரமாய் இருக்குமாம். அவன் தூக்கிய அந்த கதவுடையதும், நிலைகளினுடையதும் நிறை எத்தனையோ தொன் என்று கூறுகின்றார்கள். இப்படி பெரிய பெரிய காரியத்தை செய்த இந்த சிம்சோனுக்கு ஒரு சிறிய கத்தி அவனது தலையில்பட்டது தெரியாதோ? ஒருவேளை நாம் பெரிய காரியத்தில் விழுந்திருக்கமாட்டோம். ஆனால் சிறிய காரியங்கள் உங்களில் இருந்த தேவ பெலத்தை உங்களை விட்டு தள்ளியிருக்கும். தேவன் உங்கள் மேல் வைத்த நோக்கத்தை அகற்றுவதற்காய் செயற்பட்டிருக்கும். அவன் தொடர்ந்து அந்த பாவத்தில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையால் அது அவன் விழுவதற்கு ஏதுவாக இருந்தது.

அடுத்து நான் எப்பொழுதும் போல் எழும்புவேன், என்ற எண்ணமும் கர்த்தரிடத்தில் இருந்து வந்த பெலன் என்னோடிக்கிறது என்ற பெருமையும் அவனுக்கு இருந்திருக்கின்றது. ஒருவேளை சிம்சோனைப் போன்ற பாவமாய் நம்முடைய பாவம் இருக்காது. ஆனால் வேறு ஒரு பாவத்தில் நிலைத்திருக்கலாம். தேவன் அழைத்த அழைப்பை மறந்திருந்தால் சிம்சோனைப் போன்ற வாழ்க்கைக்குள்ளாய் நடத்தப்பட்டிருப் போம். தேவனுடைய விருப்பத்தை செய்வதற்கு மாறாய் எங்களுடைய நேரங்களை வேறு காரியங்களுக்கு செலவழித்திருந்தால் நாங்கள் வேதனைப் படுகின்ற காரியத்திற்குள்ளாய் போக வேண்டி ஏற்படும். கர்த்தர் எங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். அவருடைய பிள்ளை என்ற ஸ்தானத்தில் இருக்கிறோம். அவருடைய பிள்ளை என்ற காரியத்தை மறந்து ஏதாவது காரியம் செய்தாலும் நாங்கள் ஆபத்திலே மாட்டிக் கொள்ள வேண்டி ஏற்படும். இப்படிப்பட்ட பெரிய பாவத்தை செய்திருக்கமாட்டோம். ஆனால் தேவனுடைய அழைப்பை மறந்திருந்தால் அது கிட்டத்தட்ட இவனைப் போன்ற நிலையிலேயே எங்களைக் கொண்டு வந்துவிடும். கர்த்தருடைய அன்பை விட்டு ஓடினால் இப்படிப்பட்ட காரியத்திலே விழவேண்டி ஏற்படும்.

## 01. தரிசனத்தை இழந்தான்

**நியாயாதிபதிகள் 16:21**

**பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக்கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்க வைத்தார்கள்.**

பிரியமான கர்த்தருடைய பிள்ளைகளே, நாங்கள் தேவனுடைய நோக்கத்தை மறக்கின்ற போது இப்படிப்பட்ட நிலை எங்களுக்கு நேரிடும். அவனுடைய கண்களைப் பிடுங்கினார்கள் என்று சொல்லும் போது அதற்கு சில ஆவிக்குரிய அர்த்தங்கள் உண்டு. அவன் தனக்கிருந்த தரிசனத்தை எல்லாம் இழந்தான். இனிமேல் கர்த்தருக்காய் நீ ஒன்றும் செய்ய முடியாது என்று முதல் வேலையாக அவனுடைய கண்களைப் பிடுங்கினார்கள். நாங்கள் பாவத்திலே நிலைத்திருந்தால் தேவனுடைய பிள்ளைகள் என்ற எண்ணம், பரலோக பிரஜைகள் என்ற எண்ணம், வாடாத கிரீடத்தை பெறும்படியாய் ஓடுகின்ற ஓட்டம் எல்லாவற்றையும் இழக்க நேரிடும். தேவனைப் பார்க்கக் கூடாதபடி எங்களுடைய மனக்கண்களை இழக்க நேரிடும். அது ஆவிக்குரிய உட்பார்வையைக் கெடுத்து விடும். அனேகருக்கு தேவனோடுள்ள உறவைப் பார்க்கும் போது அது பூச்சியமாகத்தான் இருக்கும். கர்த்தரைப் பார்த்து, அவருடைய வழியில் நடந்து அவருக்காய் வாழவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் நீங்கள் விழுந்த இடத்தில் இருந்து இன்றே எழுந்திருங்கள். இல்லையென்றால் எங்களுடைய ஆவிக்குரிய உட்பார்வை இழந்து போய்விடும்.

## 02. கட்டப்பட்டுப்போனான்

அடுத்த காரியமாய், அவனை காசாவுக்கு கொண்டு சென்று இரண்டு வெண்கல விலங்கு போட்டு... என்று சொல்லப்படுகின்றது. அவனுடைய முந்தைய காலத்திலே, அவனை யாரும் கட்ட முடியாது. அப்படிக் கட்டினாலும் அறுத்துவிடுவான். ஆனால் இப்பொழுது கட்டப்பட்டிருக்கிறான். விடுதலை கொடுக்க வேண்டியவன் கட்டப்பட்டுப் போனான். சில வேளை சிறிய கட்டுக்கள் ஆரம்பத்தில் சிறிது போல இருக்கும். அதை நாங்கள் அசட்டை பண்ணினால் இறுதியில் பெரிய கட்டு விழும். சிறிய பாவம் செய்யும் போது அதைவிட்டுவிட மனதில்லாதிருந்தால் இறுதியில் அதற்கு அடிமையாகிவிடுவோம். மற்றவர்களுக்கு தேவனை அறிவிக்க வேண்டிய நாம், மற்றவர்களுக்காய் ஜெபம் பண்ண வேண்டிய நாம் பாவம் செய்து கொண்டிருக்கிறோம். இரட்சிக்கப்பட்டு இருபத்தைந்து வருடங்கள் ஆகியும் ஜெபிப்பதில்லை. ஏன் இப்படிப்பட்ட நிலை? நாம் ஏதோ ஒரு வழியில் பாவத்திற்கு அடிமைப் பட்டிருக்கிறோம். சிம்சோன் சிறிய சிறிய காரியத்தால் கட்ட தன்னை விட்டுக் கொடுத்தான். பிற்பாடு அவன் நிரந்தரமாய் கட்டப்பட்டுப்போனான்.

## 03. சிறுமைப்படுத்தப்பட்டு நிந்திக்கப்பட்டான்

மேலும் அவன் சிறைச்சாலையில் மாவரைத்துக் கொண்டிருந்தான். இது சாதாரண காரியமல்ல. இரண்டு மாடுகளைக் கொண்டு எவ்வாறு செக்கு இழுப்பார்களோ, அதே போன்று சிம்சோன் தனி ஒருவனாய் விலங்கிடப்பட்ட நிலையில் சுற்றி இழுக்கும் போது மாவரைக்கப்படும். பிரியமானவர்களே, சத்துரு மிகக் கொடூரமானவன். உங்களை சிறுமைப் படுத்தி, வேதனைப்படுத்தி, கட்டி எவ்வளவு வேதனைகளைத் தர முடியுமோ அவன் அப்படிச் செய்வான். பாவத்திலே விழுந்து விட்டால் பிசாசு உங்களை வேதனைப்படுத்துவான். தேவனுடைய நோக்கத்தை, இலக்கை, அபிஷேகத்தை இழந்தவனுக்கு நேர்ந்த கதி இது தான்.

## 04. தேவனுக்காய் உழைக்க வேண்டியவன் சத்துருவுக்காக உழைத்தான்

இஸ்ரவேலருக்கு இரட்சகனாகவே தேவன் சிம்சோனை தெரிந்து கொண்டார். ஆனால் அவன் பாவத்தில் வீழ்ந்த போது பெலிஸ்தியருக்காக மாவரைத்தான். தேவ சித்தத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுவதற்காக தன் பெலனை செலவு செய்ய வேண்டியவன் பெலிஸ்தருக்காக தன் பெலனை செலவு செய்தான்.

பெலிஸ்தியரை அழிக்க வேண்டியவன் பெலிஸ்தருக்காய் மாவரைத்தான். பெலிஸ்தர் நெருங்கி நிற்கின்ற பாவத்திற்கு அடையாள மாய் இருக்கின்றார்கள். நாங்கள் எந்த பாவத்தினால் நெருக்கப்பட்ட அடிமைகளாக இருக்கிறோம்.

## 05. தேவ ஆவியினாலே நடத்தப்பட்டவன் கைலாகு கொடுத்து நடத்தப்படுகிறான்

**நியாயாதிபதிகள் 16:26**

**சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளை யாண்டானோடே, வீட்டைத் தாங்கு கிற தூண்களிலே நான் சாய்ந்து கொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப்பார்க்கட்டும் என்றான்.**

இப்பொழுது கண்கள் பிடுங் கப்பட்ட நிலையில் ஒரு சின்ன பிள்ளை வழிகாட்டி நடத்திக் கொண்டு வருகின்றான். முன்பு பரிசுத்த ஆவியினால் நடத்தப் பட்டவன், இப்பொழுது கைலாகு கொடுக்கிறவனால் நடத்தப்படுகின் றான். எவ்வளவு வேதனையான நிலை. பாவம் செய்தால் எங்களை நடத்த வேண்டிய ஆவியானவர் எங்களை விட்டு போய்விடுவார்.

## 06. பலத்த காரியத்தைச் செய்தவன் வேடிக்கை பொருளானான்.

**நியாயாதிபதிகள் 16:27**

**அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளா லும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளு மாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.**

இப்பொழுது பெலிஸ்திய பிரபுக்கள், அதிபதிகள் எல்லாரும் அவனை வேடிக்கை காட்டும்படியாய் கொண்டு வருகிறார்கள். அந்த நேரத்தில் அவன் கேட்கிறான்; இந்த வீட்டைத்தாங்குகின்ற தூண்களண்டை தன்னை நிறுத்தும்படியாய். கடைசி யாக அவன் தேவனை நோக்கி கேட்கிறான்: ஆண்டவரே! இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும் என்று சொல்லி தன்னுடைய வலது கரத்தினால் ஒரு தூணையும் இடது கரத்தினால் ஒரு தூணையும் பிடித்து அசைத்தான். அப்படியே அந்த வீடு அங்கிருந்த அனைவர் மேலும், கூடவே சிம்சோன் மேலும் விழுந்தது. அதனால் அனை வரும் மரித்தார்கள். கூடவே சிம்சோ னும் மரித்துப் போனான்.

வேதம் சொல்கிறது: அவன் உயிரோடிருக்கும் போது செத்தவர் களைப் பார்க்கிலும் அவன் மரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற போது சாகடிக்கப்பட்டவர்கள் அதிகம் என்று கூறுகின்றது. இவன் கடைசியாக இந்த ஒருவிசை என்னை நினைத்தருளும் என்று விண்ணப்பம் செய்தான். இதைக் குறித்து சிலர் கூறுகின்றார்கள்: தேவன் அவனை மன்னித்துவிட்டார், ஆகவே தான் அவனுடைய ஜெபத்தை கேட்டார் என்றும் இன்னும் சிலர் பாவம் செய்த நீ இப்படியே மடிந்து போ என்றும் கருத்து கூறுகின்றார்கள். இதன் முடிவு என்னவென்றால் பாவத்தின் சம்பளம் மரணம். அசிங்கமான பாவத்தில் இன்பம் கண்டான்; அதனால் அப்படியே மாண்டு போனான்.

## யோவான் ஸ்நானகன்

இவன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்துப் படுகிறவனாய் இருந்தான். ஆனால் அவன் பாவத்தை எதிர்த்தான், பாவத்தை வெறுத்தான், தூய்மையாய் வாழ்ந்தான். பாவம் செய்கின்றவர்களை கண்டித்தான். இந்த யோவான் ஸ்நானகன் பரிசுத்தத்திற்காய் வாழ்ந்து இறுதியில் பரிசுத்தத்திற்காய் வைராக்கியம் காண்பித்ததின் நிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டான்.

தான் எதற்காய் அழைக்கப் பட்டானோ, என்ன நோக்கத்திற்காய் அழைக்கப்பட்டானோ அதை இறுதி வரை செய்தான். ஏரோது ராஜா தன்னுடைய சகோதரனுடைய மனைவியை தனக்கு எடுத்துக் கொண்டான். ஆகவே யோவான் ஸ்நானகன் நீர் இப்படிச் செய்வது சரியில்லை என்று சொன்னான். அதனால் ஏரோது அவனை சிறையில் அடைத்தான். ஏரோதின் ஜென்ம நாளில் சிறுபெண் நடனமாடினாள். நடனத்தில் ஏரோது மயங்கி ராஜ்யத்தில் பாதியைக் கேட்டாலும் தருவேன் என்றான். அவள் தன்னுடைய தாயிடம் இதனைக் கூறும் போது அவள் ஒரு தாலத்தில் யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கேள் என்றாள். அன்றைக்கு யோவான் ஸ்நானகன் வெட்டப்பட்டான். ஏன் அவன் வெட்டப் பட்டான்? தன்னுடைய அழைப்பை, நோக்கத்தை, கர்த்தருக்காய் தூய்மையாக வாழ்ந்து மற்றவர்களுடைய பாவத்தை கண்டு உணர்த்தியதின் நிமித்தமாக அவனுடைய தலை வெட்டப்பட்டது.

பிரியமானவர்களே, பாவத்தைக் கண்டு சிம்சோனைப் போல இருக்கப் போகின்றோமா? அல்லது பாவத்தை வெறுத்து தூய்மையான வாழ்வு வாழப்போகின்றோமா? சிம்சோன் - யோவான் ஸ்நானகன் இரண்டு பேரும் செத்தார்கள். ஆனால் நாங்கள் யாரைப்போல் வாழப்போகின்றோம். யோவான் ஸ்நானகனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவு தேவனுக்கு சுகந்த வாசனையாக இருந்தது. அவன் வாழ்ந்த பக்தி வைராக்கிய வாழ்க்கை தேவனுடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டு வந்தது. எங்களுடைய வாழ்வு எப்படி? பெரிதான அழைப்பை சிம்சோன் தன்னுடைய வாழ்க்கையில் மறுத லித்துவிட்டான். ஆனால் இறுதி வரை உறுதியாய் வாழ்ந்து தன் ஜீவனை யோவான் ஸ்நானகன் விட்டான். எனவே சிந்தித்து எமது வாழ்க்கையை மாற்றியமைப்போம்.

**'தேவன் தாமே**
**உங்களை நிறைவாக**
**ஆசீர்வதிப்பாராக'**

---

## வினா விடை - 118

01. தன் பிராணனைக் காக்க புறப்பட்டுப்போன தீர்க்கதரிசி யார்?
02. யார் எதற்கு எதிராக 'குதித்து ஆடினார்கள்'?
03. 'தேவன் இருதயத்தின் அந்தரங்கங்களை அறிந்திருக்கிறார்' என வாசிப்பதெங்கே?
04. 'அவன் பாம்பைப்போல சீறி வருவான்' என வாசிப்பதெங்கே?
05. 'சுகத்தை மறந்தேன்' என்றது யார்?
06. 'என் மகனே... நான் உனக்குக் கற்பிக்கிறபடி செய்' என்றது யார்?
07. இயேசுவை சோதிக்கும்படி கேள்வி கேட்டவன் யார்?
08. 'உன் வேதனை நீங்கி சுகமாயிரு' என்றது யார்?
09. யார் - யாருக்கு முன்பாக 'ஆடிக்கொண்டு போனார்கள்'?
10. அவன் 'ஒரு பாலசிங்கம்' அவன் பற்கள் பாலினால் வெண்மையாயிருக்கும் அவன் யார்?

---

**தானியேலின் உபத்திரவத்தின் (சிங்ககெபி) இறுதியில் தேவன் வெளிப்பட்டார்**
**சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரின் உபத்திரவத்தின் (அக்கினிச்சூளை) இறுதியில் தேவன் வெளிப்பட்டார்**
**நாம் தேவனை வெளிப்படுத்தும் ஒரு வழி தேவனுக்காய் எங்களுக்கு வரும் உபத்திரவத்தை இறுதி வரை சகிப்பது!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 115

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. எசேக்கியா (ஏசாயா 38:9-14)
03. ஏலாம் (தானியேல் 8:2)
06. கேயாசி (11இராஜாக்கள் 8:5)
10. தானியேல் (தானியேல் 10:5)
12. நீதிமான் (நீதிமொழிகள் 14:32)
16. திகிலாத்பிலேசர் (11இராஜா 15:27-29)

**வலமிருந்து இடமாக**


07. ராகேல் (ஆதியாகமம் 31:19)
09. பிலேயாம் (நெகேமியா 13:1)
11. சாமுவேல் (1சாமுவேல் 7:6)
13. காலேப் (எண்ணாகமம் 13:6)
14. பாரேஸ் (1நாளாகமம் 2:4)
15. ஆபிரகாம் (யாக்கோபு 2:23)

**மேலிருந்து கீழாக**

01. எசேக்கியேல் (எசேக்கி 1:1)
02. கிதியோன் (நியாயாதிபதிகள் 6:11)
04. எலிசா (11இராஜாக்கள் 13:21)

**கீழிருந்து மேலாக**

05. மனாசே (11நாளாகமம் 33:1)
08. நெகேமியா (நெகேமியா 1:4)
14. பாகால்பிராசீம் (1நாளா 14:11)




## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'வேரில்லை. ஆனால் அதில் இலையும், பூவும், பழமும் உண்டு' அது என்ன?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2023 புரட்டாதி - ஐப்பசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

ஆரோனின் கோல் **(எண்ணாகமம் 17:1-8)**

*அன்பின் வாசகர்களுக்கு!*

இவ் வருடம் முழுவதும் அனல் சஞ்சிகை உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகின்றோம். அதே போன்று எதிர்வரும் வருடத்திலும் உங்கள் பிரதிகளை தவறாமல் பெற்றுக் கொள்வதற்கு இப்பொழுது உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். அத்துடன் எதிர்வரும் வருடத்தில் உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கும் இச் சஞ்சிகை கிடைக்கப்பெற அவர்களுக்கும் அறிமுகம் செய்து கொள்ளுங்கள்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிமை இல்லையேல்

**வேதப்பகுதி: யோசுவா 1:7-9**

நீ ஒரு வீட்டில் தனியாக இருக்கிறாய். அப்போது லேசாகக் காற்று வீசி ஜன்னல் கதவுகளில் சத்தம் வந்தால் பயந்துவிடுவாய். சமையல் கட்டில் ஒரு பாத்திரம் விழுந்தால் பயந்துவிடுவாய். ஒரு பூனை ஓடுகின்ற சத்தம் கேட்டால் பயந்து விடுவாய். நீ ஏன் பயப்படுகிறாய் என்று உனக்குத் தெரியுமா? நீ தனிமையில் இருக்கிறாய். எனவே எதற்கெடுத்தாலும் உடனே பயந்துவிடுகிறாய். ஒருவேளை இப்போது உன் அம்மாவோ அப்பாவோ உன்னுடன் இருந்தால் நீ பயமில்லாமல் தைரியமாயிருப்பாய்.

இந்த உலகத்தில் நாம் பயப்படும்விதமாய் பல காரியங்கள் நடக்கும். ஆனால் நாம் பயப் படாமல் இருக்க முடியும். நம்முடன் கர்த்தர் இருந்தால் போதும். அப்போது என்ன நடந்தா லும் நாம் தைரியமாயிருப்போம். கர்த்தரை நமக்குள் ஏற்றுக்கொண்டு வாழவேண்டும். அப்போது நம்முடைய இருதயத்தில் பயம் வராது. கர்த்தர் ஏற்ற துணையாயிருப்பார்.

**சிந்தனைக்கு:-**

**பயப்படுத்தப்பல சூழ்நிலைகள் உண்டு. இயேசுவோடு இருப்பவர்கள் அவைகளை மேற்கொள்வார்கள்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – பிப்ரவரி 24

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:......................................................

முகவரி:....................................................

..............................................................

..............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org